

# தமிழியல் ஆய்வில் பேராசிரியர் சு. வித்தியானந்தனின் வகிபாகம்

**பேராசிரியர் செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்**
தமிழ்த்துறை, கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

**அறிமுகம்**

தமிழ்மொழி முத்தமிழ் என அழைக்கப்பட்டது. முத்தமிழிற்குள் எல்லாக் கற்கைநெறிகளுமே அடங்கியிருந்ததையும் அறிவோம். இன்று அது நீட்சிபெற்று, தகவல் தொழினுட்ப ஆராய்ச்சி வளர்ச்சியடைந்துள்ளதால் அதனை 'அறிவியல் தமிழ்' என்கிறோம். காலப்போக்கில் எல்லாக் கற்கைநெறிகளும் தமிழ்மொழி மூலமே கற்பிக்கப்படலாயிற்று. தமிழர்களுடைய சமயம், இலக்கியம், மொழி, கலை, வரலாறு, சமூகவியல், அரசியல், பொருளியல், மானுடவியல், நாட்டாரியல் உள்ளிட்ட பல்வேறு கற்கைநெறிகளை ஆய்வுசெய்யும் துறையினையே 'தமிழியல் ஆய்வு' எனத் திறனாய்வாளர்கள் குறிப்பிடுவர். பேராசிரியர் சு.வித்தியானந்தனின் தமிழியல்சார் செயற்பாடுகள் மூலமாகவும், அவரின் கற்பித்தல் முறைமை மூலமாகவும், நிர்வாக ரீதியான ஒழுங்குபடுத்தல்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல்கள் மூலமாகவும், தமிழாராய்ச்சி மாநாட்டை ஆரம்பித்து வழிகாட்டியமை மூலமாகவும், கலை பண்பாட்டைப் பேணிய பிற செயற்பாடுகளினூடாகவும் அவர் தமிழியற்புலம் சார்ந்த பங்களிப்பினைத் திறனாய்வு செய்யமுடியும்.

வித்தியானந்தனுக்கு 1941 ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகத்தில் மாணவனாகச் சேரும் வாய்ப்புக் கிட்டியது. பேராசிரியர்களான சுவாமி விபுலானந்தர், க. கணபதிப்பிள்ளை, வி. செல்வநாயகம் ஆகியோரிடத்துத் தமிழை முறையாகக் கற்கும் வாய்ப்பினைப் பெற்றார். அவர்களின் செல்லப்பிள்ளையாக வித்தியானந்தன் இருந்தார். 1944 இல் கலைமாணிப் பட்டத்தினையும், 1946 இல் முதுகலைமாணிப் பட்டத்தினையும் பெற்றார். பேராசிரியர்கள் மூவரினதும் வழிகாட்டலில் வளர்ச்சி

கண்டார். மேலும் 1948 இல் இலண்டன் பல்கலைக்கழகக் கீழைத்தேய கல்விக் கல்லூரியில் கலாநிதிப்பட்ட ஆய்வினைத் தொடர்ந்தார். 'பத்துப்பாட்டு – வரலாறு சமூக மொழியியல் நோக்கு' என்னும் பொருளில் கலாநிதிப்பட்ட ஆய்வினை, அல்பிரெட் மாஸ்ரரின் நெறிப்படுத்தலில் மேற்கொண்டார். ஆங்கிலத்தில் எழுதி நிறைவுசெய்த ஆய்வேட்டிற்கு 1950 ஆம் ஆண்டு இலண்டன் பல்கலைக்கழகம் கலாநிதிப்பட்டத்தினை வழங்கியது. 1970 களில் பேராசிரியர் பதவியினைப் பெற்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பல பொறுப்புக்களையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தராகவும் இருந்து தமிழியற் பணிகளை முன்னெடுத்தார். எனவே, தமிழியல் ஆய்வுப்புலத்தில் பேராசிரியர் வித்தியானந்தனின் பங்கு அளப்பெரியது. ஆகையால் அவர் ஆற்றிய ஆய்வுப்புலப் பங்களிப்பினை மதிப்பீடு செய்யவேண்டிய தேவையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**கற்பித்தல் முறைமை**

ஒரு நல்லாசிரியன் எப்படி இருக்கவேண்டுமோ, அதற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் வித்தியானந்தன். கருத்துக்களை வெளியிடவேண்டும் என்ற கொள்கையிலிருந்து மாணவர்களை வழிப்படுத்தும் திறன்மிக்கவர். இலக்கணப்பிழையின்றிச் சந்திபிரித்துச் சேர்த்து எழுதுவதற்கு உகந்த இலக்கணநூல் ஆறுமுகநாவலருடைய 'இலக்கணச் சுருக்கம்' எனப் பெரியவர்களுக்கும் மாணவர்களுக்கும் வழிகாட்டி நின்றவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்களுக்கு நன்னூல், தொல்காப்பியம் சொல்லதிகாரம், திருக்கோவையார், சங்க இலக்கியம், பாரதிதாசன் பாடல்கள் எனப் பலவற்றை மிக எளிமையாக எல்லோரையும் கவரக்கூடியவகையில் வித்தியானந்தன் பாடம் நடாத்திவந்தார். பேராசிரியரது நகைச்சுவை, இரசனை முறையினைப் பல மாணவர்களும் இரசிப்பதுண்டு. அதனால் பேராதனை விரிவுரை மண்டபங்களில் தமிழைச் சிறப்பாகக் கற்காத ஏனைய பீட மாணவர்களும் வந்து இருப்பதாக அறிகிறோம். பல மாணவர்களும் பேராசிரியரது கற்பித்தலை இரசனை நயத்துடன் நயந்து செல்வதைக் காணலாம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராக வந்த காலத்திலிருந்து 1988 வரை தமிழ்த்துறை மாணவர்களுக்குத் தமிழைச் சிறப்பாகக் கற்பித்து வந்தார். துணைவேந்தர் பதவியில் இருக்கும்பொழுது பல வேலைப்பழுக்களின் மத்தியிலும் விரிவுரையாற்றத் தவறுவதில்லை. கற்பித்தலில் பேராசிரியருக்கு இருந்த நாட்டத்தையே இது காட்டுகின்றது. நாங்கள் முதலாம் வருடம் படிக்கும்பொழுது இலக்கிய வரலாற்றினை எல்லோரும் கவரக்கூடிய வகையில் இலக்கிய நயத்துடன் கற்பித்தார். எப்படி இலக்கிய வரலாற்றை அணுகுவது என்ற முறையில் கற்பித்தார். கற்பிப்பதோடு மட்டுமல்லாது குறிப்புக்களையும் தந்து உதவுவார். இரண்டாம் வருடத்தில் எமக்குத் திருக்கோவையாரைக் கற்பித்தார். திருக்கோவையாரை எப்படிப் பார்ப்பது என்ற நோக்கில் இரசனைமுறைத் திறனாய்வு நோக்கில் கற்பிப்பார். மூன்றாம் வருடத்தில் தொல்காப்பியம் சொல்லதிகாரத்தினைக் கற்பித்தார். சொல்லதிகார இலக்கணத்தைக் கற்பிக்கும்போது நடைமுறை உத்திகளைக் கையாண்டு விளக்குவார். மரபு பற்றிக் கற்பிக்கும்பொழுது பெற்றோர், கடைசிப்பிள்ளைகளுக்குப் பெயர் வைக்கும்பொழுது தமது தந்தையாரின் பெயரை வைப்பது வழக்கம். தான், தனது இளைய மகனுக்குச் சுப்பிரமணியம் என வைத்தால், மகன் வளர்ந்து இக்காலத்துக்கு ஏற்ற பெயரை அப்பா

வைக்கத் தவறிவிட்டார் எனக் குற்றம்சாட்டுவார். அதனால் தனது மகனின் பெயரைச் சிவமைந்தன் என மாற்றி வைத்தேன் என மரபை நவீனத்துடன் இணைத்து நோக்கும் கல்விமுறையினை நயந்து சொல்லுவார்.

பேராசிரியர், இந்தியப்படை யாழ்ப்பாணம் வந்த காலத்தில் புகைவண்டியில் பயணம் செய்வார். யாழ்ப்பாணத்திலிருந்து பரமேஸ்வராச்சந்தியில் வரும் புகைவண்டியில் சனம் நெருக்கடியாக இருப்பதை அறிந்தவர். நான் சிலவேளை பத்து நிமிடம் வகுப்புக்குப் பிந்திவந்தால் உடனே மற்றைய பிள்ளைகளிடம் உத்தரவுபெற்று படிப்பித்த பாடத்தை மீளவும் திருப்பிக் கற்பிப்பார். அப்படியாரும் செய்வதில்லை. எமக்குப் பல்கலைக்கழகக் கல்வியில் அடி அத்திவாரத்தை ஏற்படுத்தித் தந்தவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன். இந்த இடத்தில் பேராசிரியரை நன்றியுடன் நினைவுகூர்கின்றேன்.

பேராசிரியரின் மாணவ பரம்பரையினர் உலகெங்கிலும் காணப்படுகின்றனர். ஒவ்வொரு மாணவரது அறிவுப் பின்புலத்திலும் பேராசிரியரது வழிகாட்டல் இருந்து வந்துள்ளது. அப்பொழுது தமிழ்த்துறைத் தலைவராக பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை நியமிக்கப்பட்டிருந்தார். மேலும் தமிழ்த்துறைப் பேராசிரியர்களாக கா. சிவத்தம்பி, அ. சண்முகதாஸ், சித்திரலேகா மௌனகுரு, பாலசுந்தரம், சுப்பிரமணிய ஐயர், சிவலிங்கராசா போன்றோர் தமிழ்த்துறையை அலங்கரித்தனர். மாணவர்கள் படிக்கும்பொழுது அவரவர் திறமைகளை இனம்கண்டு அவர்களை வழிப்படுத்தி நெறிப்படுத்துவதில் பேராசிரியருக்குப் பெரும் பங்குண்டு. மாணவர்களை உயர்கல்வி கற்று ஆராய்ச்சிப் புலமையில் ஈடுபாடுகொள்ள வைத்தவரும் பேராசிரியரே. பலர் முதுகலைமாணிப்பட்ட ஆய்வினை மேற்கொள்ளவும், கலாநிதிப்பட்ட ஆய்வினைத் தொடரவும் வழிகாட்டினார். பேராசிரியரிடம் கல்விகற்று, அவரது வழிகாட்டலில் உயர் பதவிகளில் இருப்பவர் பலர். அவர்களுள் பேராசிரியர் க. சதாசிவம், பேராசிரியர் எஸ். தனஞ்செயராஜசிங்கம், பேராசிரியர் க. கைலாசபதி, பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை, பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் தி. தில்லைநாதன், பேராசிரியர் அ. சண்முகதாஸ், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், பேராசிரியர் இ. பாலசுந்தரம், திருமதி பாலசுந்தரம், பேராசிரியர் நா. சுப்பிரமணியன், பேராசிரியர் கலாநிதி செங்கை ஆழியான், பேராசிரியர் கலாநிதி எஸ். ஜெபநேசன், பேராசிரியர் மௌனகுரு, காரை சுந்தரம்பிள்ளை, பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, பேராசிரியர் சி. பத்மநாதன், பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் உவைஸ், பேராசிரியர் பாலகிருஸ்ணன், ஜனாப் எம். ஐ. எம், முஸாதிக், தேசியக் கல்வியியற் கல்லூரியின் மேனாட் தலைவர் திருநாவுக்கரசு, துரை மனோகரன், பேராசிரியர் ம. இரகுநாதன், திரு. பொ. செங்கதிர்ச்செல்வன், பேராசிரியர் செ. சிவசுப்பிரமணியம், பேராசிரியர் குகபாலன், கிருஸ்ணராஜா எனப் பட்டியல் நீண்டு செல்லும். ஒவ்வொருவரின் தமிழியல் ஆய்வுக்கு வழிகாட்டி, அவர்களைச் சமூகத்தில் உயர்ந்த நற்சேவை செய்ய வழிநடத்திய பெருமை பேராசிரியர் வித்தியானந்தனையே சாரும்.

**ஆய்வு நெறிப்படுத்துகை**

எந்தத்துறையில் மாணவர்களை வழிப்படுத்தி நெறிமுறைப்படுத்த வேண்டுமோ, அந்தத் துறைகளில் மாணவர்களை வழிகாட்டினார். எம். எம். உவைஸ் மேற்கொண்ட கலாநிதிப்பட்ட ஆய்விற்கு நெறிப்படுத்தினார் என முதலில் நோக்கினாம். யாழ்ப்பாணப்

பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராக நியமனம்பெற்ற பின்னர் சி. மௌனகுரு, நா. சுப்பிரமணியஐயர், காரை சுந்தரம்பிள்ளை, வண. எஸ். ஜெபநேசன், எஸ். சிவலிங்கராஜா போன்றோர்களை ஊக்கமளித்து, அவர்களைக் கல்விப்புலத்தில் புலமையாளராக்க முன்னின்று உழைத்தார். கூத்தை ஆய்வுப்பொருளாக ஏற்றுக்கொள்ள வைத்தவர். கூத்து, நாவல், சிறுகதை என்ற பல்பரிமானத் துறைகளில் மாணவர்களை ஈடுபாடு கொள்ளச்செய்தார். ஈழத்து இலக்கியம் பற்றிய ஆய்வுத் தேடலில் ஈடுபடுமாறு உயர்பட்ட மாணவர்களை வழிப்படுத்தியமை தமிழியல் ஆய்வில் முக்கிய கருதுகோளாகும். ஆய்வேடுகளை உன்னிப்பாகப் பார்த்து அவற்றில் திருத்தவேண்டியவற்றைத் திருத்தியும், மாற்ற வேண்டியவற்றைச் சுட்டிக்காட்டியும் உயரிய பணியினை மேற்கொண்டார்.

வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் கலாநிதிப்பட்ட ஆய்வுகளிற்கு வெளிநிலைப் பரீட்சகராக நீண்ட காலமாகப் பணியாற்றினார். மலேசியாப் பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், கேரளப் பல்கலைக்கழகம், திருப்பதி வேங்கடேஸ்வரர் பல்கலைக்கழகம் முதலியவற்றில் வெளிநிலைப் பரீட்சகராகச் செயற்பட்டுள்ளார். வெளிநாடுகளில் சென்று ஆய்வு நிகழ்த்தியும், விரிவுரை நிகழ்த்தியும் தமிழியல் ஆய்வினை சர்வதேச மட்டத்தில் பரவலாக்கம் செய்தமை பேராசிரியரது புலமையைக் காட்டுகின்றது. தெற்கு இங்கிலாந்து, பெரிய பிரித்தானியா, யூகோசிலாவாக்கியா, ஐக்கிய அமெரிக்கா, யப்பான், மலேசியா போன்ற நாடுகளுக்கு அழைப்பின் பெயரில் சென்று, தனது ஆய்வினையும் விரிவுரையினையும் முன்னெடுத்துச் சென்றார். மேற்குறிப்பிட்ட பல்கலைக்கழகங்கள் பேராசிரியரை விருந்துநிலைப் பேராசிரியராக கௌரவப்படுத்தின.

1977 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வளாகத்தலைவராகப் பதிவியேற்றார். 1978 இல் யாழ்ப்பாண வளாகம் தரம் உயர்த்தப்பட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக மாறியதும், முதல் துணைவேந்தராக இவரே நியமிக்கப்பட்டார். பின்னர் தொடர்ந்து மூன்று தடவைகள் பல்கலைக்கழகப் பேரவையினால் துணைவேந்தராக இவரே தேர்ந்தெடுக்கப்பட்டார். யாழ்ப்பாண வளாகம் கலை, விஞ்ஞானம் என்னும் இரண்டு பீடங்களை மட்டும் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. வித்தியானந்தன் மருத்துவபீடத்தை யாழ்ப்பாணத்தில்தோற்றுவிக்க வேண்டும்என்பதில்கண்ணும்கருத்துமாகச்செயற்பட்டார். பல இன்னல்களுக்கு மத்தியில் மருத்துவபீடத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நிறுவியதைப் பலரும் அறிவார். இன்று சர்வதேசத் தரத்தில் அது பரிணமிப்பதை யாவரும் கண்டு மகிழ்வடைகின்றனர். மேலும், சித்த மருத்துவத்துறை, நுண்கலைத்துறை போன்றவற்றையும் ஆரம்பித்து வைத்தார். நுண்கலைத்துறையில் பேராசிரியர். கா. சிவத்தம்பியைத் தலைவராக நியமித்தார். விரிவுரையாளர்கள் இல்லையே என்ன செய்வது? என்று சொல்லப்பட்டபொழுது, 'படித்துப் படித்துப் படிப்பிக்கலாம்' எனத் துறையை ஆரம்பித்தார். பேராசிரியர் கிருஸ்ணவேணி, பேராசிரியர் சனாதனன், கலாநிதி அகிலன் போன்றோர் பேராசிரியர் வித்தியானந்தனின் வழிகாட்டலில், பேராசிரியர் கா. சிவத்தம்பியின் நெறிப்படுத்தலில் வளர்ச்சி பெற்றவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**இலக்கிய ஆய்வுகள்**

தமிழ்த் தேசியத்தின் ஒருமைப்பாட்டில் கவனம் செலுத்தியவர். தமிழ்பேசும் மக்களை ஒன்றிணைத்து அரவணைத்துச் செல்பவர். இன இணக்கப்பாட்டினை உருவாக்குவதில்

முன்னின்று உழைத்தவர். கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம் மாணவர்களை ஒரே குடையின்கீழ் அரவணைத்துச் சென்றவர். வேறுபாடு காட்டாத மாமனிதன் வித்தியானந்தன். தமிழ்த்துறைக்கு ஒரு முஸ்லிம் மாணவனாவது இணைத்திருப்பதைக்கண்டு தான் மகிழ்ச்சியடைவதாகக் கூறுவாராம். பேராசிரியர் அவர்களிடம் எம். எம். உவைஸ் அவர்கள் 'முஸ்லிம் தமிழ்க் காப்பியம்' என்ற தலைப்பில் முனைவர்பட்ட ஆய்வினை மேற்கொண்டார். பேராசிரியர் பலவகையிலும் எம். எம். உவைஸ்க்கு நெறிப்படுத்தி வந்தார். மேலும் உவைஸ் அவர்கள் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமியப் பல்கலைக்கழகப் பேராசிரியராகப் பதவிவகித்தார். பேராசிரியர் வித்தியானந்தனின் நெறிகாட்டலில் ஈழத்து இஸ்லாமிய இலக்கிய வரலாற்றை இரண்டு தொகுதிகளாக வெளியிட்டுள்ளார். அதில் ஈழத்து முஸ்லிம்களின் பிரபந்த இலக்கியங்கள் விரிவாகப் பேசப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் வித்தியானந்தனின் ஆய்வு பற்றிக் கூறும்பொழுது பேராசிரியர். கா. சிவத்தம்பி அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுவார். "ஈழத்துத் தமிழ்ப் பண்பாடு என்னும் கருதுகோளை சனநாயக நிதர்சன முழுமையுடன் நோக்கும் தன்மையே இவரது அனைத்துக் கலை செயற்பாடுகளில் காணப்படும் சூழ்நிலைக் கட்டமைப்பு ஆகும். ஈழத்துத் தமிழ்பேசும் மக்கள் சகலரையும் உள்ளடக்கும் வகையிலும், பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலும் அமையும் ஒரு பண்பாட்டுக் கோலத்தை விபரிப்பதும், அந்த விபரண அடிப்படையில் ஈழத்துத் தமிழ்ப் பண்பாட்டுக்கு ஒரு மீள் வரைவிலக்கணம் வழங்குவதுமே வித்தியானந்தன் அவர்களின் பணிகளின் உட்கிடக்கையாகும்" (கா. சிவத்தம்பி, வித்தியானந்தம் நூலின் அணிந்துரை, ப. II). இவ்வெளிப்படுத்துகையானது, ஈழத்துப் பண்பாடு பற்றியும், ஈழத்து இலக்கியம் பற்றியும் பேசும்பொழுது தமிழ்பேசும் மக்களை மையப்படுத்திப் பேசவேண்டும் என்ற நோக்கினைப் புலப்படுத்துகின்றது.

வண. தனிநாயகம் அடிகளாரின் பணிகளை உற்று நோக்கிய வித்தியானந்தன் அவர்கள், அவருடன் இணைந்து தமிழியல் ஆய்வினை மேற்கொண்டவர். பேராசிரியர வித்தியானந்தனின் கிறிஸ்தவ இலக்கியப்பணி குறிப்பிட்டுச் சொல்லத்தக்கது. 1962 ஆம் ஆண்டு "கிறிஸ்தவரும் ஈழத்தில் தமிழ் வளர்ச்சியும்" என்ற கட்டுரையைப் பேராதனைப் பல்கலைக்கழக 'இளங்கதிர்' இதழில் எழுதினார். மேலும், ஈழத்து 'மிசனரிமாரின் தமிழ்த்தொண்டு', 'அமெரிக்க மிசனும் தமிழ்க்கல்வி' என்ற கட்டுரைகளையும் எழுதினார்.

இஸ்லாமியர்களுடைய வளர்ச்சிக்காகப் பல கட்டுரைகளை வெளியிட்டு வந்துள்ளார். 'இஸ்லாமியர் தமிழ்த்தொண்டு', 'இஸ்லாமியருடைய கலை இலக்கிய மரபுகள்', 'இஸ்லாமியரும் தமிழிற் புதிய பிரபந்த வகைகளும்' என்ற கட்டுரைகளை எழுதி அவர்களை விளிப்படையச் செய்தவர். ஒட்டுமொத்த தமிழ்பேசும் மக்களின் ஈழத்து இலக்கிய வரலாற்று மீள உருவாக்கம் செய்வதில் கருத்தூன்றிச் செயற்பட்டவர். சைவம், கிறிஸ்தவம், இஸ்லாம் என்ற மதங்களை உள்ளடக்கியதே ஈழத்து இலக்கிய வரலாறு என்பது பேராசிரியரது கருத்தாகும்.

"சைவமும் வைணவமும் பாடிய பிரபந்தங்களைப் பாடுவதோடு மட்டும் இஸ்லாமியர் நின்றுவிடவில்லை. அவர்கள் பல புதிய பிரபந்த வகைகளையும் தமிழிற் புகுத்தித் தமிழ் அன்னையைப் பொலிவுடன் வாழச்செய்தனர். படைப்போர் முனாஜாத்து, கிஸ்ஸா, மசாலா, நாமா என்ற இத்தகைய படைப்புக்களை முஸ்லிமல்லாத புலவர்கள் பாடவில்லை.

படைப்போர் என்பது தமிழ்ப்பெயர். போர்ப் பிரபந்தமே படைப்போர். முனாஜாத்து என்னும் அரபுச்சொல் இரகசியம் பேசுதல் என்ற கருத்துடையது. இச்சொல் வழிபாட்டுப் பிராத்தனை என்பதையும் குறிக்கும். கதை என்ற பொருளைக் கொண்டது கிஸ்ஸா என்னும் சொல். இது இஸ்லாமிய மதக் கதைககளைக் கூறும். மசாலா என்ற அரபுச்சொல்லின் பொருள் வேள்வி என்பதாகும்" (சு. வித்தியானந்தன் தமிழியற் சிந்தனை, ப.72). இவ்வாறு இஸ்லாமியர் இயற்றிய பிரபந்தங்கள் பற்றிப் பேராசிரியர் விதந்துரைக்கின்றார். முஸ்லிம் சகபாடிகளுடன் கூடிய உசாவலின் மூலம் பல அரிய கருத்துக்களை வெளிக்கொணர முடிந்தது என்றும், வேறுயாரும் இதுபற்றிய தகவல்களை வெளியிடவில்லை என்றும், பேராசிரியர் உவைஸ் கிறிஸ்தவ முஸ்லிம் இலக்கியம் பற்றிய நூலில் இப் பிரபந்தங்களின் வகைகள் பற்றித் தெளிவாக விளக்குகின்றார். பின்னாளில் முஸ்லிம் ஆய்வாளர்கள் இப்பிரபந்தங்கள் பற்றி ஆய்வுசெய்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

**தமிழியற் சிந்தனை**

தமிழின் வாழ்வுக்கும், வளத்திற்கும் அயராது உழைத்த பெருமக்கள் பணிகளை அவ்வப்போது பேராசிரியர் வித்தியானந்தன் தமிழ்மொழி, ஆங்கிலமொழி மூலம் பல கட்டுரைகளை எழுதிவந்தார். பேராசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குத் துணைவேந்தராக நியமிக்கப்பட்டபொழுது அவரது மாணவர்கள், நண்பர்கள் சேர்ந்து 'தமிழியற் சிந்தனை' என்ற நூலை முத்தமிழ் வெளியீட்டுக்கழகத்தினால் வெளியிட்டனர். 'தமிழியல் சிந்தனை' என்ற நூலில் ஒன்பது கட்டுரைகள் வரையப்பட்டுள்ளன. ஏழு கட்டுரைகள், ஈழத்துத் தமிழறிஞர்களின் அரும்பெரும் பணிகளைப் பறைசாற்றுகின்றன. நாவலரும் தமிழகமும், நாவலரும் ஈழமும், ஈழமும் தமிழிலக்கணமும், ஈழத்தில் கிராமிய நாடகங்கள், ஈழத்திலே சமயமும் கல்வியும், ஈழத்திலே தமிழ்க்கல்வியும் பல்கலைக்கழகமும், இஸ்லாமியரும் தமிழிற் புதிய பிரபந்த வகைகளும் என்ற ஏழு கட்டுரைகளும் தமிழ்மொழியில் எழுதப்பட்டன. மற்றைய கட்டுரைகள் ஆங்கில மொழிமூலம் எழுதப்பட்டன. Tamil influences on Sinhalese, Tamil studies in English in Ceylon என்ற முதலாவது ஆங்கிலக் கட்டுரை சிங்களப் பயன்பாட்டில் தமிழ்ச் செல்வாக்கு, இரண்டாவது கட்டுரை ஈழத்தில் தமிழறிஞர்கள் தமிழ் பற்றி (தமிழாய்வுக்கற்கை பற்றி) ஆங்கிலமொழியில் எழுதியவற்றைக் குறிப்பிடுகின்றன.

'நாவலரும் தமிழகமும்' என்ற கட்டுரையில் "யாழ்ப்பாணத்தமிழ் செந்தமிழ் என்று நிலைநாட்டியும், நாவலர் என்ற பட்டத்தைப்பெற்றும் சைவப்பிரசங்கமாரி பொழிந்து சைவப்பயிரை வளர்த்தும், சைவ ஆதீனங்களிற் பலருக்குச் சமய அறிவும் தமிழறிவும் ஊட்டியும், அவ்வாதினங்களைச் சைவப்பணியிலும் தமிழ்த் தொண்டிலும் வழிநடத்தியும், சிவ நிந்தனையையும் போலிக் கொள்கைகளையும் நீக்கியும், சிதம்பரச் சைவ வித்தியாசாலை மூலம் தமிழ்க் கல்வியைச் சமய அடிப்படையில் வளர்த்தும், நாவலர் பதிப்பு என்று எவரும் மதிப்புக் கொடுக்கக்கூடிய முறையில் நூல்களைப் பிரசுரித்தும், தமிழகத்தை ஈழ நாட்டிற்குக் கடமைப்படுத்தியிருக்கின்றார் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர்" (சு. வித்தியானந்தன் தமிழியற் சிந்தனை, ப.08). இங்கு நாவலர் மேற்கொண்ட பணிகளை வகுத்தும், தொகுத்தும் திறனாய்வு முறையில் வித்தியானந்தன் குறிப்பிடுவது நோக்கத்தக்கது. ஈழநாட்டவரே தமிழகத்திற்கு முன்னோடி என்பதைப் பல கட்டுரைகளில் பேராசிரியர் வித்தியானந்தன் விதந்துரைப்பது கண்கூடு.

வித்தியானந்தன், 'நாவலர் இருவர்' என்ற கட்டுரையில் ஆறுமுகநாவலரையும், சுவாமி விபுலானந்தரையும் ஒருசேர நோக்கி 'நாவலர் இருவர்' என்கிறார். நாவலரை முன்மாதிரியாகக் கொண்டு அவருடைய வாழ்வை அடியொற்றித் துறவுபூண்டு தமிழிற்கும், இந்து சமயத்திற்கும் தொண்டாற்றியவர் விபுலானந்தர் என்று அவரை இரண்டாவது நாவலராகப் பேராசிரியர் வித்தியானந்தன் பார்க்கிறார். மேலும் நாவலர் வழியில் விபுலானந்தர் கிழக்கிலங்கையிற் பல பாடசாலைகளை நிறுவினார். திருகோணமலை இந்துக்கல்லூரியும், கல்லடி உப்போடை சிவானந்த வித்தியாலயமும் இவரது முயற்சியால் சிறந்த கல்விநிலையங்களாக இருந்தன என்று குறிப்பிடுகின்றார். ஆறுமுகநாவலரையும், சுவாமி விபுலானந்தரையும் ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் ஒப்பியல் நோக்கில் அமைந்த ஆய்வுக்கட்டுரையாக இதைப் பதிவுசெய்துள்ளார்.

பேராசிரியர் வித்தியானந்தன் 'ஈழமும் தமிழ் இலக்கணமும்' என்ற கட்டுரையில் சி. வை. தாமோதரம்பிள்ளை, ஆறுமுகநாவலர், தி. கனகரத்தினம், குமாரசுவாமிப்புலவர், சிவசம்புப்புலவர், ஈழகேசரி பொன்னையா, மாவை மகாலிங்கம் போன்றோர் இலக்கணநூல்களைப் பதிப்பித்து தமிழ்ப்பணி புரிந்ததை விதந்துரைக்கின்றார். கணேசையர் இலக்கண ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளார். ஆறுமுகநாவலர் – இலக்கணச் சுருக்கம், யாழ்ப்பாணம் சங்குவேலியில் வாழ்ந்த சி. தம்பையாபிள்ளை – தமிழ் வாயாகரணம், சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர் – வினைப் பகுபத விளக்கம், பொன்னம்பலம் இராமநாதன் – செந்தமிழ் இலக்கணம், நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் – சொற் பிறப்பகராதி என இலக்கண நூல்களையும், ஈழத்து அறிஞர்களின் இலக்கண வெளிப்பாடுகளையும் இக்கட்டுரையில் எழுதியுள்ளார்.

"இலக்கிய, இலக்கண நூல்களிற்குக் கூறும் உரைகளையும், உரை விளக்கமாகக் கூறும் இலக்கணக் குறிப்புக்களையும் கேட்டுத் தமது அறிவை விருத்தி செய்வதற்கு தென்னிந்தியாவிலிருந்து தமிழறிஞர் பலர் ஈழத்திற்கு வந்தனர்." எனப் பேராசிரியர் கூறுகின்றார் (சு. வித்தியானந்தன் தமிழியற் சிந்தனை, ப.29). இக்கட்டுரையில் சி. வை. தாமோதரம்பிள்ளை நூல்கள் அழிவதைக் கண்ணுற்றுத் துடிதுடிப்பதைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

'எத்தனையோ திவ்ய மதுர கிரந்தங்கள் காலாந்தரத்தில் ஒன்றன்பின் ஒன்றாய் அழிகின்றன. சீமான்களே! இவ்வாறு இறந்தொழியும் நூல்களில் உங்களுக்குச் சற்றாவது கிருபை பிறக்கவில்லை? ஆச்சரியம் ஆச்சரியம் அயலான் அழியக் காண்கிலும் மனம் தளம்புகின்றதே. தமிழ் மாது நும் தாயல்லவா. இவள் அழிய நமக்கென்ன என்று இருக்கிறீர்களா? இதனைத் தயைகூர்ந்து சிந்திப்பீர்களாக.' இவ்வாறு கொதித்து ஆவேசத்துடன் சி. வை. தாமோதரம்பிள்ளை கூறுவதைக் குறிப்பிடுகின்றார். நூல்கள் அழிவதைக் கண்ணுற்றுத் தன் துடிதுடிப்பை வெளிப்படுத்தியுள்ளாரென சி. வை. தாமோதரம்பிள்ளையின் ஆதங்கத்தைப் பேராசிரியர் குறிப்பிடுகின்றார்.

பேராசிரியர் வித்தியானந்தனின் தமிழிற் சிந்தனையை ஈழத்துத் தமிழ் மக்களின் மொழி, பண்பாடு தொடர்பான பணிகளை விபரித்துச் செல்வதனூடாக அவரது தமிழியல் ஆய்வின் நீட்சியைக் கண்டுகொள்ள முடிகின்றது. பேராசிரியர். அ. சண்முகதாஸ், "ஈழத்து இலக்கிய வரலாறு என்னும் நூலொன்றினை அடுத்து வெளியிட வேண்டுமென எண்ணிய வெளியீட்டுக்கழகத்தினருக்குப் பேராசிரியருடைய கட்டுரைகள் நான்கு

உதவின. ஒரு கட்டுரையைத் தவிர ஏனையவை யாவும் ஈழத்துத் தமிழியல் ஆய்வுடன் சம்பந்தப்பட்டனவே. இவ்வகையில், எமது நோக்கமும் நிறைவேறுகின்றது. பேராசிரியரின் தமிழ்ப்பணியும் நிலைபேறு பெற்று உலகெலாம் பரவ வகைசெய்யும் வாய்ப்பினை நாம் ஏற்படுத்தும் ஒரு பேற்றினையும் பெறுகிறோம்" (அ. சண்முகதாஸ், வெளியீட்டுரை, தமிழியற் சிந்தனை). 'தமிழியற் சிந்தனை', முத்தமிழ் வெளியீட்டுக் குழுவின் சார்பாக பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களால், தனது குருவின் மாட்சிமை பொருந்திய தமிழியல் ஆய்வாக வெளிக்கொண்டுவந்தமை நோக்கத்தக்கது.

**இலக்கியத்தென்றல்**

'இலக்கியத் தென்றல்' என்ற நூல் தமிழ் இலக்கியப் பரப்பு, தமிழ் இலக்கண நூல், ஐம்பெருங் காப்பியங்கள், இஸ்லாமியர் தமிழ்த்தொண்டு, ஈழநாட்டுப் பெரியார் தமிழ்மொழிக்காற்றிய தொண்டு என்ற கட்டுரைகளைத் தாங்கி 1953 இல் வெளிவந்தது. இந்நூல் பேராசிரியரது முதல் முயற்சியின் பயனாய் வெளிவந்த நூல். தமிழ் இலக்கிய வரலாற்றின் குறிப்பிட்ட விடயங்களை விளக்குகின்றது. இலக்கிய வரலாற்றை மாணவர்களும், ஆய்வாளர்களும் எப்படி நோக்கவேண்டும் என்று வழிகாட்டுகின்றது. இலக்கியங்களின் தோற்றம், அவற்றின் இயல்புகள் என்பவற்றை காலவரையறை செய்து, பாகுபடுத்தி, பகுப்பாய்வு செய்வனவாக இவை அமைகின்றன. தமிழ் இலக்கிய வரலாற்றைச் சங்க காலம், சங்கமருவிய காலம், பல்லவர் காலம், சோழர் காலம், விஜயநகர நாயக்கமன்னர் காலம், ஐரோப்பியர் காலம், தற்காலம் எனப் பகுத்து ஆய்வு செய்கின்றார். காலகட்டங்களாக வகுத்து அவற்றின் அரசியல், சமூகப்பின்னணியை நேர்த்தியான முறையில் பேசுகின்றார். மாணவர்களுக்கு இந்நூல் பெரும் பயனுடையதாகக் காணப் பட்டது. இலக்கிய வரலாற்றினை இந்தக் கண்ணோட்டத்துடனே அன்று கற்பித்தும் வந்தார்.

இலக்கியத் தென்றலில் 'தமிழ் இலக்கண நூல்கள்' என்ற ஒரு கட்டுரை அமைகின்றது. தமிழ் இலக்கிய வரலாறு போல இலக்கண வரலாறும் இருக்கின்றது. தமிழ்நாட்டில் தோன்றிய இலக்கண நூல்களை வகுத்து, வரலாற்று அடிப்படையில் அவற்றின் இயல்புகளை விதந்தோதுகின்றார். "தொல்காப்பியத்தில் சமயம் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் காணப்படுகின்றன. தொல்காப்பியர் சமண சமயத்தவர் என்பார் என்ற கூற்றே பொருத்தமுடையதாகத் தோன்றுகின்றது. 'பல் புகழ் நிறுத்த படிமையோன்' எனத் தொல்காப்பியர் சிறப்பிக்கப்படுகின்றார். படிமை என்பது சமண சமய வழக்குச்சொல். அச்சொல் தவ ஒழுக்கம் உணர்த்தல் என்றதனை சமணசமய நூலின்கண்ணே காணப்படுவதால் தொல்காப்பியர் சமணர் என்பர். ஒவ்வொரு உயிரிலுமுள்ள அறிவு நுட்பங்களைக் கூரியதாக ஆராய்ந்து, உயிர்களைப் பல பிரிவுகளாகப் பிரித்தவர் சமணரே. இதனைத் தொல்காப்பியர் மரபியலிற் கூறுகின்றார் (சு. வித்தியானந்தன் இலக்கியத்தென்றல், ப.36). இவ்வாறு பல எடுத்துக்காட்டுகளை ஆய்வுக்கு முன்னிறுத்தித் தனது கருத்தினைக் கருதுகோளாக நிறுவுகின்றார். இத்தகைய ஆய்வு முறையியல் பிற்கால இலக்கண ஆய்வாளருக்கு வழிகாட்டியாகின்றது.

**தமிழர் சால்பு**

தமிழ் மக்களுடைய சங்ககாலப் பண்பாட்டை எடுத்து இயம்புவது பேராசிரியர் வித்தியானந்தனின் 'தமிழர்சால்பு' என்ற நூலாகும். அவரது கலாநிதிப்பட்ட ஆய்வினை அடியொற்றி எழுதப்பட்ட இந்நூலில் சங்ககால வரலாறு, அரசியல் அமைப்பு, போரும்

போர் முறைகளும், தமிழ் மக்களுக்கான சிறப்பான சமயக் கோட்பாடுகளும் வழிபாட்டு முறைகளும், தெய்வங்கள், நம்பிக்கைகளும் சமயச் சடங்குகளும் வழிபாட்டு முறைகளும், சமண பௌத்தம், சமய வாழ்க்கை, நம்பிக்கைகள், சமூக அமைப்பு, வாணிபம், பெண்கள், கல்வியும் கலையும், இலக்கியம் என்ற நோக்கில் பகுத்து, வகுத்துச் சங்கச் சால்பினைத் திறனாய்வு நோக்கில் எடுத்தியம்பியுள்ளார். இலக்கியத்தினை அதன் அரசியல், சமூகப்பின்னணி, மொழிநடை என்பவற்றை அடிப்படையாகக்கொண்டு நோக்கப்படவேண்டும் எனவும், அதன் காலநிர்ணயம் செய்ய வேண்டியதன் அவசியத்தையும், ஆய்வாளருக்கு வழிகாட்டும் முகமாக அவரது ஆய்வுப்புலம் நீண்டு செல்கின்றது. தமிழர்களுக்குரித்தான திராவிடப் பண்புகள் இருப்பதாகத் தனது ஆய்வினை இங்கு முன்னெடுத்துச் செல்கின்றார்.

சாதிமுறைமையென்பது நிலத்தையும், தொழிலையும் அடிப்படையாகக் கொண்டதேயொழிய சாதியமைப்பு இருக்கவில்லை என்பதே பேராசிரியரது கருத்தாகும். சமுதாயத்தில் பெண்கள் மிகவும் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தனர் எனவும், சமணர்களின் வருகையினாலேதான் பெண்களைப் பற்றிய கருத்து மாற்றம்பெறத் தொடங்கியது என்ற கருத்தியலையும் முன்வைக்கின்றார். இந்நூல் ஆய்வாளர்களுக்குப் பலவகையிலும் வழிகாட்டி நிற்கின்றது. எவ்வாறு ஆய்வினை முன்னெடுப்பது என்பது பற்றியும், சங்ககாலச் சால்பினை விளங்கிக்கொள்ளவும் இந்நூல் அரியதொரு பொக்கிசமாக விளங்குகின்றது. “சங்ககாலத்தில் சமண, பௌத்தரின் செல்வாக்குச் சிறந்திருப்பின், சங்கநூல்களில் உலக வாழ்க்கையை வெறுக்கின்ற ஒரு பண்பு காணப்படல் வேண்டும். அதற்குப் பதிலாக அந்நூல்களில் உலக வாழ்க்கையை விரும்பும் ஒரு உணர்வே செறிந்து விளங்குகின்றது” (சு. வித்தியானந்தன், தமிழர் சால்பு, ப. 167) எனத் தனது ஆய்வு முடிவில் தெளிவாக முன்வைக்கின்றார்.

பேராசிரியர். அ சண்முகதாஸ் அவர்கள், தமிழர் சால்பு பற்றிக் கூறும்பொழுது, “இவருடைய தமிழ் ஆய்வுக்குச் சிகரம் வைப்பதுபோல் அமைந்தது தமிழர் சால்பு என்னும் நூல். மேலும் தமிழருடைய கலை, இலக்கியம், மொழி, வரலாறு, சமூகம், அரசியல், பொருளியல், சமயம், நடைமுறைகள் போன்ற பல்வேறு விடயங்களையும் ஆய்வுசெய்யும் கூறாகத் தமிழியல் என்னும் ஆய்வுப்பரப்பு அமைந்தது. அத்தகைய ஆய்வுகள் உள்ளடங்கிய ஒரே நூலாகவும், முன்னோடி நூலாகவும் அமைவது பேராசிரியர் வித்தியானந்தனின் தமிழர்சால்பு” (அ.சண்முகாதாஸ், துணைவேந்தர் வித்தி, ப. 71) எனக் கூறியமை இவ்விடத்தில் நோக்கத்தக்கது. மேலும் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை அவர்கள் தமிழர்சால்பு பற்றிக் கூறும்பொழுது, “இதுபோன்ற இன்னொரு சிறந்த நூல் சங்ககாலத் தமிழர் பண்பாட்டை விளக்குவதற்குத் தமிழ்நாட்டிலே தோன்றவில்லை. வித்தியானந்தனுடைய முப்பதாவது வயதில் வெளிவந்த இந்த ஒரு நூலே தமிழியல் ஆய்விலே அவருக்கு ஒரு நிரந்தர இடத்தைப் பெற்றுத்தரவல்லது” என்று கூறியமை நோக்கத்தக்கது (ஆ. வேலுப்பிள்ளை நினைவுப் பேருரை). இது தமிழகத்து மற்றும் ஈழத்துப் பேராசிரியர்கள் பலரதும் பாராட்டைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

**கலையும் பண்பும்**

‘கலையும் பண்பும்’ என்ற நூல், 1961 ஆம் ஆண்டு ‘பிறையன்பன்’ என்ற புனைபெயரில் பேராசிரியர். சு. வித்தியானந்தனால் எழுதப்பட்டது. பல முஸ்லிம் சகோதரர்களின்

உதவியுடன் இந்நூலை யாத்துள்ளார். இஸ்லாத்தின் சிறப்பியல்புகள், அதன் தோற்றமும் வளர்ச்சியும், ஈழமும் முஸ்லிம்களும், புவியியலும் வர்த்தகமும், கலைகள், விஞ்ஞானமும் சட்டமும் சமுதாயமும், இஸ்லாமியர் தமிழ்மொழிக்காற்றிய தொண்டு - I, II என்ற பொருளில் அந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. இஸ்லாமியர் உலகப்பண்பாட்டிலும், வரலாற்றிலும் ஏற்படுத்திய கலை பற்றியும், பண்பாடு பற்றியும் தமிழில் வெளிவராத நிலையில் பேராசிரியர் வித்தியானந்தன் அவர்கள் எழுதியமை விதந்து குறிப்பிடத்தக்கது. தாய்மொழி தமிழாக இருப்பதால் அவர்கள் யாவரையும் இணைக்க முடிகின்றது என்பது பேராசிரியரது உயர்ந்த நோக்காக இருந்தது. இஸ்லாத்தின் அடிப்படைக் கருத்துக்கள் இஸ்லாத்தின் சிறப்பியல்புகளில் விளக்கப்படுகின்றது. புவியியற்கொள்கை, வரலாற்றில் புவியியல் பற்றி இஸ்லாமியர் எழுதிய நூல்களின் வரலாறு, அவர்கள் நடாத்திய வர்த்தகத்தின் வரலாறு முதலியவற்றைப் பேராசிரியர் இந்நூலில் குறிப்பிடுகின்றார். இஸ்லாமியக் கட்டிடக்கலை, ஓவியம், இசை, நாடகம், கைத்தொழில் என்பவற்றில் இஸ்லாமியரின் பங்களிப்பு என்ற வகையில் விரிவாக நோக்கப்பட்டுள்ளது. விஞ்ஞானத்திலும், வைத்தியத்துறையிலும் இஸ்லாமியர் ஆற்றிய பணிகள், இஸ்லாமியரின் சமுதாயம், சட்ட அமைப்பு, ஒழுங்குமுறையில் அமைந்த வரலாற்றை இந்நூல் விபரிக்கின்றது.

பேராசிரியர் வித்தியானந்தன் பல்கலைக்கழகத்திற்கு அப்பால் சமூகத்துடன் இணைந்தும் பணியாற்றினார். சிறுகதை, நாவல், கவிதை எழுதும் படைப்பாளிகளை நெறிப்படுத்தி அவர்களின் ஆக்கங்களுக்கு அணிந்துரை பல எழுதியுள்ளமை வியந்து குறிப்பிடத்தக்கது. கலையுள்ளம் படைத்தவர்களை இனம்கண்டு அவர்களைத் தன்னுடன் சேர்த்தமை, பல கூத்து நடிகர்கள், பாடகர்கள், அண்ணாவிமார்களைத் தன்னுடன் சேர்த்தமை முதலிய செயல்களை மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. அவர்களைக் கௌரவித்துச் சிறப்பும் செய்துள்ளார். இவ்வாறு பேராசிரியர் வித்தியானந்தனின் தமிழியல் வளர்ச்சி நீண்டு செல்கின்றது.

**நாட்டாரியல் - நாடகம்**

பேராசிரியர் வித்தியானந்தனின் பணிகளுள் நாடக – நாட்டாரியல் செயற்பாடுகள் மிக முக்கியமானவை. பேராசிரியர். க. கணபதிப்பிள்ளையின் ஆளுமையைப் பின்பற்றி அவரது பாணியில் தனது பணிகளைத் தொடர்ந்தார். பேராசிரியர் வித்தியின் நாடக – நாட்டாரியற் செயற்பாடுகளை வெளிக்கொணரும் நோக்கில், அவரது கட்டுரைகளைப் பேராசிரியரின் ஒருவருடப் பூர்த்தியின் ஞாபகமாகப் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் தொகுத்துள்ளார். அந்நூலின் பெயராக 'நாடக நாட்டாரியல் சிந்தனைகள்' அமைந்துள்ளது. அதில் பத்துக் கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

நாடகத் தயாரிப்பு, ஈழத்திலே தமிழ் நாடகம், ஈழத்துத் தமிழ்க் கூத்துமரபு, பேராதனைப் பல்கலைக்கழகத்திலே தயாரிக்கப்பட்ட கூத்துக்கள், மட்டக்களப்பு நாட்டுக்கூத்துக்களில் தாளக் கட்டுக்கள், நடிகமணி வைரமுத்துவின் பக்த நந்தனார், பேராசிரியர் கணபதிப்பிள்ளையும் இலங்கையில் தமிழ் நாட்டார் வழக்கியலும், இலங்கைத் தமிழரின் பாரம்பரிய இசை என்ற வகையில் பேராசிரியரது கட்டுரைகள் காணப்படுகின்றன. மட்டக்களப்பு, மன்னார், யாழ்ப்பாணப் பகுதிகளில் காணப்பட்ட நாட்டுக்கூத்துப் பிரதிகளையும் நாட்டார் பாடல்களையும் பதிப்பித்துக் கலையுலகினுக்கு அளிக்கை செய்தார். கிராமங்களில் பயன்பட்ட நாட்டுக்கூத்துக்களுக்கு உயிர்கொடுத்து, நவீனப்படுத்திப் புத்தாக்கம் செய்தார்.

பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களின் இலக்கிய ஆளுமை பற்றிப் பேராசிரியர் வித்தியானந்தன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "நாடக அரங்கம், பேச்சுமொழியை உரையாடலில் வழங்கலாமா? என்ற ஐயம் தோன்றிய காலத்திலே மக்களைப் பற்றி மக்களுக்காக ஆக்கப்படும் நாடகங்களிலே மக்கள்மொழி கையாளப்பட வேண்டும் என்பதைத் தமது நாடகங்களின் மூலம் நிலைநாட்டிய நாடகவித்தகர். தமிழை மொழியமைப்பாக, இலக்கியக்கோவையாக, நாகரிகமுறையாக விளக்கி, கனம் கல்விமான்களால் புரியப்படாத பல்கலைக்கழக மாணவனுக்கும், ஆசிரியருக்கும் உள்ள உறவு அத்தியாந்த அறிவுநிலை, நட்பு என வற்புறுத்திய பெருமகன். நாட்டுப்புறப்பற்றும், நாட்டு வாழ்வும் இலக்கியத்திலும் இடம்பெறவேண்டும் என்பதைச் செயலில் காட்டியவர். அவர்தான் எங்கள் பேராசிரியர் கா. கணபதிப்பிள்ளை. பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் குரு, முத்துக்குமாரசுவாமி அவர்கள். அவரது குருபக்தியைக் காதலியாற்றுப்படையில் நோக்கலாம் எனவும் பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்கள் காட்டும் குருபக்தி, இன்று பல இடங்களில் காணப்பாடதது கவலைக்குரியது" எனக்கூறும் பேராசிரியர் வித்தியானந்தனின் எழுத்துக்கள் இவ்விடத்தில் நோக்கத்தக்கது (சு. வித்தியானந்தன், நாடக நாட்டாரியல் சிந்தனைகள், ப. 60).

இலங்கைத் தமிழரின் பாரம்பரிய இசை பற்றிக் குறிப்பிடும்பொழுது, இசையிலுள்ள ஒத்திசை ஒழுங்கு இராகம் என்பன பண்பாட்டுக்குப் பண்பாடு வேறுபடும் என்பதும், ஒவ்வொரு இனத்தவரிடையேயும் காணப்படும் ஒத்திசை ஒழுங்கு இராகம் என்பன தமக்கெனச் சில தனித்துவங்களைக் கொண்டிருக்கும் என்பதும் பேராசிரியர் வித்தியானந்தனின் சிந்தனையாகும். தென்னிந்தியாவில் வாழ்ந்த தமிழரிடையே தனித்துவமான இசைமரபு நிலவியதைச் சங்க இலக்கியங்கள் மூலம் தரிசிக்கிறோம். ஆனால் இலங்கைக்கென தனித்துவமான இசை மரபுகள் இருந்தன என்பது பேராசிரியர் வித்தியானந்தனின் கருத்தாகும். இவ்வாறு பேராசிரியரது தமிழியற்பணிகள் நீண்டுசெல்கின்றன.

பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்கள் எழுதிய முருகன் திருதாளம், உடையார் மிடுக்கு, தவறான எண்ணம், துரோகிகள், சுந்தரம் எங்கே? என்ற சமூக நாடகங்களையும் சங்கிலியன் என்ற வரலாற்று நாடகத்தினையும் பேராசிரியர் வித்தியானந்தன் தயாரித்து மேடையேற்றினார். இலங்கை அரசின் கலைக்கழக நாடகக் குழுத்தலைவராக இருந்து பாடசாலை மன்றம் என்ற மட்டத்தில் நாடகப்போட்டிகள், நாடகவிழாக்களை ஊக்குவித்தார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கர்ணன் போர், நொண்டி நாடகம், இராவணேசன், வாலிவதை என்ற நாடகங்களை வித்தியானந்தன் தயாரித்து மேடையேற்றிவந்தார். பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர். அ. சண்முகதாஸ், பேராசிரியர் மௌனகுரு போன்றோர் பாத்திரமேற்று நடித்தும் வந்தனர். பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள், நாடகம் பற்றிய ஆய்வில் ஈடுபடுவதற்கு வழிகாட்டியாக இருந்தவர்கள் பேராசிரியர் கணபதிப்பிள்ளையும், பேராசிரியர் வித்தியானந்தனும் ஆவார்கள். பேராசிரியர் மௌனகுரு அவர்கள் வித்தியானந்தன் பாணியிலே இப்பொழுதும் நாடகங்களை மேடையேற்றிவருவது குறிப்பிடத்தக்கது. தென்மோடி, வடமோடிக்கு இடையிலான வேறுபாடுகளை வித்தியானந்தன் தெளிவுபடக் காட்டியிருக்கின்றார். நாடகங்களைப் பதிப்பித்து தமிழர்களது கலைமரபினைப் பேணுகை செய்திருக்கின்றார்.

எண்ட்றீக்கு எம்பரத்தோர் நாடகம், மூவிராசாக்கள் நாடகம், அலங்காரரூபன் நாடகம், ஞானசவுந்தரி நாடகம் என்பவற்றைப் பதிப்பித்து உயிர்கொடுத்தார். நாட்டுப்புறப் பாடல்களைப் பதிப்பு செய்தவர்களில் வட்டுக்கோட்டை மு. இராமலிங்கம் குறிப்பிடத் தக்கவர். அவருக்கு அடுத்து பேராசிரியர் வித்தியானந்தன் பணி முக்கியமானது. மன்னார் மாவட்ட நாட்டுப்பாடல்கள், மட்டக்களப்பு நாட்டுப்பாடல்கள் என்ற பிரதேசங்களை அடிப் படையாகக் கொண்டு பாடல்களைப் பகுப்பாய்வு செய்து பதிப்பித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. நாட்டார் பாடல்களைப் பதிப்பு செய்யும்பொழுது அதில் வரும் சொற்களை, ஒலி களை மாற்றம் செய்யக்கூடாது. அதனை அவ்வாறே பதிப்பிக்கவேண்டும் என்ற கொள்கை யுடையவர். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார் மாவட்டங்களில் ஒலிகள் வெவ்வேறு விதமாகவும், சொற்கள் வேறுவிதமாகவும் காட்சியளிக்கின்றன. அவரவர் பண்பாட்டுக்கு ஏற்பவும், இன வரலாற்றுக்கு ஏற்பவும் சொற்கள் காணப்படுகின்றன. ஒலி, ஒலியமைப்புச் சொற்களின் பொருள் என்பன ஆய்விற்கு அடிப்படையாகின்றன. ஒலிகளைக் கொண்டும், சொற்களைக் கொண்டும் மாவட்டங்களின் பண்பாடுகளை விளங்கிக்கொள்ளலாம்.

தமிழியற் சிந்தனையில் 'ஈழத்தின் கிராமிய நாடகங்கள்' என்ற தலைப்பில் திறனாய்வு நோக்கில் அவற்றைப் பாகுபடுத்தி வகுத்து, அவற்றின் இயல்புகளைக் கூறுவது குறிப்பிடத்தக்கது. இக்காலச் சமூகம் தனது பழைய கலைச்செல்வங்களை மறந்துவிட்டது எனவும், மறக்கப்பட்டு மறைந்துகொண்டிருக்கும் கலைகளில் ஒன்று மக்கள் வளர்த்த கிராமிய நாடகக் கலை எனவும் பேராசிரியர் வித்தியானந்தன் குறிப்பிடுகின்றார். ஈழத்திலே மட்டக்களப்பிலும், மன்னாரிலும் ஆடப்படும் கிராமிய நாடகங்களை ஆய்வுசெய்து அவற்றின் வேறுபாடுகளைத் திறனாய்வு முறையில் குறிப்பிடுகின்றார். மக்களின் சமூகவாழ்க்கை, சமயத்தோடு பின்னியிருக்கின்றது என்றும், மன்னார்ப் பகுதியில் கிறிஸ்தவ மத அடிப்படையில் பாடப்பட்ட வடபாங்கு, தென்பாங்கு நாடகங்களும் – சபாக்களும் – வாசாப்புக்களும் ஆடப்பட்டு வருகின்றன என்றும், மட்டக்களப்பிலே தென்மோடி, வடமோடிக் கூத்துக்களும், விலாசங்களும் ஆடப்படுகின்றன எனவும் குறிப்பிடுகின்றார்.

மேலும் நாடகமேடை, கூத்துப்பழகும் மரபு, தென்மோடி வடமோடி, தாளக்கட்டு, நாடக வகைகள், சிங்கள மொழியில் நாடகங்கள் என்ற முறையில் பேராசிரியரது ஆய்வுமுறை அமைகின்றது. வடமோடிக்கும் தென்மோடிக்கும் இடையேயுள்ள வேறுபாட்டினைப் பலர் அறியாதுள்ளனர். பேராசிரியர் வித்தியானந்தன் அவற்றுக்குள்ள வேறுபாட்டினை இலாவகமாகத் தெளிவாக விளக்கிச் செல்வது அவரது ஆய்வுப்புலத்தை வெளிப்படுத்துகின்றது. வடமோடிக்கும், தென்மோடிக்கும் இடையிலான கதைப்போக்கு, இசை, ஆடல், உடை முதலியவற்றில் வேறுபாடுகள் உண்டு என்பதனைத் தெளிவுபடுத்துகின்றார். வடநாட்டுப் புராதன இதிகாசக் கதைகள், வடமோடி நாடகங்கள், இராம நாடகம், தர்மபுத்திர நாடகம், சூரசங்காரம், பாண்டவர் வனவாசம், கர்ணன் போர் போன்றவை பற்றியும் விளக்குகின்றார்.

இவை போர்செய்து வெற்றி பெறுவதைக் கூறுவன. இவற்றில் வீரம், கோபம், அழுகை முதலிய சுவைகள் இருக்கும். ஈழத்தில் நடிக்கப்படும் பவளவல்லி நாடகம், நொண்டிநாடகம் என்பன தொன்மோடி நாடக வகையைச் சார்ந்தன என்கிறார். ஆட்டத்திலும், பாட்டிலும் இருமோடிக்கும் வேறுபாடு காட்டப்படுகின்றது. தென்மோடி ஆட்டங்கள், வடமோடி ஆட்டங்களிலும் நுணுக்கமானவை மற்றும் கடினமானவையாகும். தொன்மோடி

நடிகர், வரவு ஆட்டம் ஆடியதும் களைத்துப் போவதனால் வரவைக் குறிக்கும் பாட்டை அண்ணாவிமார் அல்லது பக்கப்பாட்டுக்காரர் பாடுவர். வடமோடி ஆட்டம் நுணுக்கமற்ற காரணத்தினாலே வரவு ஆட்டத்தின் பின்னர் தமது வரவுப்பாட்டை நடிகரே பாடுவர். தொன்மோடியிற் பாட்டுக்களை இழுத்துப்பாட வடமோடியில் அவை சாதாரணமாகச் சொல்லப்படும். வடமோடியில் நடிகர் ஒரு பாட்டைப் படிக்கப் பக்கப்பாட்டுக்காரர் தொடர்ந்து அதனை முழுதாகப் படிப்பார். தென்மோடியில் கடைசிப் பகுதியை மட்டும் பிற்பாட்டுக்காரர் தொடர்ந்து படித்துவிட்டுப் பாட்டு முழுவதற்குமுரிய தருவைப் பாடுவர் (சு. வித்தியானந்தன் தமிழியற் சிந்தனை, ப. 35) எனத் தெளிவான முறையில் தென்மோடி வடிமோடிக்கிடையிலான வேறுபாட்டினை விளக்குகின்றார். பல நாடக ஆய்வாளருக்கு இவை வழிகாட்டியாகவும், முன்மாதிரியாகவும் அமைகின்றன.

**தமிழாராய்ச்சி மாநாடுப் பணிகள்**

தமிழியல் ஆய்வுகளில் ஈடுபட்டு, பன்னாட்டு அறிஞர்களையும் இணைத்துத் தமிழ் ஆய்வுகளை மேன்மைப்படுத்த தனிநாயகம் அடிகள் அரும்பாடுபட்டார். முதலாவது தமிழாராய்ச்சி மாநாடு 1964 இல் கோலாலம்பூரில் வண. தனிநாயகம் அடிகள் தலைமையில் நடைபெற்றது. அம்மாநாட்டில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் கலந்து சிறப்பித்துள்ளார். பேராசிரியர் வித்தியானந்தன் இலங்கையிலே 1964 வரை நடைபெற்ற தமிழ், இலக்கியம், மொழி, சமயம், வரலாறு, பண்பாடு பற்றிய ஆய்வுவெளிப்பாட்டினை அம்மாநாட்டில் வெளிப்படுத்தினார். தமிழியல் ஆய்வின் தொடக்கப்புள்ளியாக இவ்வாய்வு அமைந்தது. இலங்கையில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களுடைய இலங்கைத் தமிழியல் ஆய்வும், பேராசிரியர் அருணாசலம் அவர்களுடைய இலங்கைத் தமிழியல் ஆய்வும் தமிழியற்புல ஆய்வின் வளர்ச்சிநிலைகளைக் காட்டுவன. இதற்கு வித்தியானந்தன் அவர்களுடைய வழிப்படுத்தலே காரணமாயிற்று. மேலும், பேராசிரியர் வித்தியானந்தன் அவர்கள் சென்னை, பாரிஸ், மதுரை ஆகிய இடங்களில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளில் கலந்துகொண்டு ஆய்வுக்கட்டுரைகளைப் படித்துவந்தார். பேராசிரியரது தமிழியல் ஆய்வில் உள்ள ஈடுபாடு காரணமாக உலகத் தமிழாராய்ச்சி மன்றத்துடன் இணைந்துகொண்டார். உலகத்தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளையின் தலைவராகவும் பேராசிரியர் வித்தியானந்தன் நியமிக்கப்பட்டார்.

1974 ஆம் ஆண்டு நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு, யாழ்ப்பாணத்தில் பலருடைய எதிர்ப்பின் மத்தியிலும் பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. யாராலும் செய்யமுடியாத காரியத்தை வித்தியானந்தன் அவர்கள் செய்துமுடித்தார். அவருடைய அருஞ்செயல்களைத் தமிழ்ச் சமுதாயம் கண்டு பெரும் மகிழ்ச்சியடைந்தது. ஏழு நாட்களாக மாநாடு கோலாகலமாக நடைபெற்றது. மாநாட்டின் பொது அரங்குகள் வீரசிங்கம் மண்டபத்திலும், கலையரங்குகள் வேறு இடங்களிலும், பொருட்காட்சிகளும் உரை அரங்குகள் எனப் பல காட்சிகள் நடைபெற்றன.

பெருந்தொகையான ஆய்வுக்கட்டுரைகள் இம் மாநாட்டில் படிக்கப்பட்டன. இலக்கியம், சமயம், மொழி, வரலாறு, புவியியல், சட்டம், சமூகவியல், கலை, பண்பாடு எனத் தமிழியல் சார் கட்டுரைகள் படிக்கப்பட்டன. யாழ்ப்பாணம் இந்திரவிழாக் காட்சியாகக் காட்சியளித்தது. வித்தியானந்தனின் தமிழியற் பணியினைப் பலரும் வியந்து போற்றினர். நான்காம் தமிழாராய்ச்சி மாநாட்டுத் தலைமையுரையில் பேராசிரியர்

வித்தியானந்தன் பின்வருமாறு குறிப்பிட்டமை நோக்கத்தக்கது. "ஈழத்துத் தமிழ்பேசும் மக்கள் தமிழ்மொழிக்காற்றிய தொண்டு சாலப் பெரிது. தமிழ்மொழி வளர்ச்சியில் பல துறைகளில் ஈழநாட்டுப் பெரியாரே வழிகாட்டி உதவியுள்ளனர். இறக்கும் நிலையிலிருந்த ஏட்டுச்சுவடிகளுக்கு உயிர் கொடுத்தவர் ஈழநாட்டவரே" (பேராசிரியர் சு. வித்தியானந்தன், வித்தியானந்தம், பக் – ).

இங்கு தமிழியல் ஆய்வில் ஈழநாட்டவரின் பங்களிப்பினை முன்வைத்துள்ளமையும், யாழ்ப்பாணத்தவர்கள் அஞ்சாநெஞ்சம் கொண்டவர்கள் என்ற கருத்தை முன்வைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. மேலும், வித்தியானந்தனின் தலைமையில் இலங்கைக்கிளை இரண்டு தேசிய மாநாடுகளை நடாத்தியது. 1976 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்றது. ஈழத்து அறிஞர்களும், கலைஞர்களும் ஒன்றுகூடி மாநாட்டில் பங்குகொண்டனர். மட்டக்களப்புப் பற்றிய தகவல்கள் எல்லாவற்றையும் திரட்டித் தொகுத்தனர். இம்மாநாட்டில் சமயம், இலக்கியம், வரலாறு, அரசியல், மொழி, புவியியல், கலை, சமூகவியல், பொருளியல், புவியியல் எனப் பல்துறையிலும் ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

1983 ஆம் ஆண்டில் வன்னிமாவட்டத் தமிழாராய்ச்சி மாநாடு பேராசிரியர் வித்தியானந்தன் தலைமையில் முல்லைத்தீவில் கோலாகலமாக நடைபெற்றது. பல ஆய்வுக்கட்டுரைகள் படிக்கப்பட்டன. வன்னிமாவட்டம் தொடர்பான பல விடயங்கள் இம் மாநாட்டின் ஊடாக வெளிவந்தன. இம் மாநாட்டிலும் கலை, இலக்கியம், மொழி, சமயம், சமூகவியல், பொருளியல், புவியியல், அரசியல், வரலாறு எனப் பல்துறைகளிலும் ஆய்வுகள் நடைபெற்றன. பேராசிரியர் வித்தியானந்தனின் தமிழியல் ஆய்வின் வளர்ச்சி நிலையினை இது காட்டுகின்றது. பதினோராவது தமிழாராய்ச்சி மாநாடு சென்ற ஆண்டு சென்னையில் நடைபெற்றது. மாநாடு எப்படி நடாத்தப்படவேண்டும் என்ற முறையை வித்தியானந்தன் மாநாட்டுச் செயற்பாடுகளினூடாக வெளிப்படுத்தியுள்ளார். இன்று பல்கலைக்கழகங்களில் மாநாடு நடைபெற்றுவருகின்றன. அவற்றுக்கெல்லாம் வித்தியின் வழிகாட்டல் முன்மாதிரியாகின்றது. உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள் பதினொரு தடவைகள் நடைபெற்றன. அம் மாநாடுகளில் வாசிக்கப்பட்ட கட்டுரைகளை எல்லாம் திருவாளர்.குமரேசன் அவர்கள் ஒன்றுதிரட்டி வெளியீடு செய்வதற்கு அரும்பாடுபட்டுக்கொண்டிருப்பதையும் அறிவோம்.

**முடிவுரை**

ஈழத்து இலக்கிய வளர்ச்சிபற்றிப் பேசும்போது, ஈழநாட்டவரே தமிழகத்திற்கு முன்னோடி என்பதையே பேராசிரியர் வித்தியானந்தனின் கருத்தாகும். தமிழகப் பண்பாட்டு வேர்களை ஆய்வுசெய்திருப்பினும், இவரின் தமிழிற் சிந்தனை ஆய்வுகள் ஈழத்துத் தமிழ் மக்களின் மொழி, பண்பாட்டினைப் பெரிதும் அடியொற்றியது. இலக்கியத்தினை அதன் அரசியல், சமூகப்பின்னணி கொண்டு நுணுகி ஆராய்ந்தவர். ஈழத்திலே தமிழ் நாடகம், ஈழத்துத் தமிழ்க் கூத்துமரபு என்பவையே இவரின் நாட்டாரியல்சார் ஆய்வுப்புலங்களாகும். மட்டக்களப்பு, மன்னார், யாழ்ப்பாண பகுதிகளில் பேணப்பட்ட நாட்டுக்கூத்துக்களுக்கு உயிர்கொடுத்து, நவீனப்படுத்திப் புத்தாக்கம் செய்த பெருமை இவருக்குரியது. இவரின் மாணவ பரம்பரையினர் இன்று உலகெங்கிலும் பரந்துள்ளனர். நாட்டுப்புறவியல் ஆய்வுகளில் கூத்தை ஆய்வுப்பொருளாக ஏற்றுக்கொள்ள வைத்தவர். ஈழத்து இலக்கியம்

பற்றிய ஆய்வுத் தேடலில் உயர்பட்ட மாணவர்களை வழிப்படுத்தியமை தமிழியல் ஆய்வில் முக்கிய கருதுகோளாகும். வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் கலாநிதிப்பட்ட ஆய்வுகளிற்கு வெளிநிலைப் பரீட்சகராக நீண்ட காலமாகப் பணியாற்றினார். வெளிநாடுகளுக்குச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டும், விரிவுரைகளை நிகழ்த்தியும் தமிழியல் ஆய்வினைச் சர்வதேச மட்டத்திற்குப் பரவலாக்கம் செய்தமை முக்கியமானது. வெளிநாடுகளில் வித்தியானந்தன் அவர்கள் விருந்துநிலைப் பேராசிரியராகவே கௌரவம் பெற்றார். 'படித்துப் படித்துப் படிப்பிக்கலாம்' என்பது இவரின் கற்பித்தல் கோட்பாடாகும். தமிழ்த் தேசியத்தின் ஒருமைப்பாட்டிலும் கவனம் செலுத்தியவர். இன இணக்கப்பாட்டினை உருவாக்குவதில் முன்னின்று உழைத்தவர். கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம் மாணவர்களை ஒரே குடையின்கீழ் அரவணைத்துச் சென்றவர். எனவே, ஈழத்தமிழர்களுடைய சமயம், இலக்கியம், மொழி, கலை, வரலாறு, சமூகவியல், அரசியல், பொருளியல், மானுடவியல், நாட்டாரியல் உள்ளிட்ட பல்வேறு கற்கைநெறிகள் இணைந்த தமிழியல் ஆய்வில் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களின் பங்கு குறிப்பிடத்தக்கது. அவரின் கற்பித்தல் முறைமை, நிர்வாக ரீதியான ஒழுங்குபடுத்தல்கள், நிர்வாக நடைமுறைகள், ஆராய்ச்சி வழிப்படுத்தல்கள், தமிழியல் சிந்தனை ரீதியான ஆய்வுகள், அவைசார்ந்த ஆய்வுநூல் வெளிப்பாடுகள், தமிழாராய்ச்சி மாநாட்டுச் செயற்பாடுகள், பிறகலாசார ஆய்வுப்பேணுகைகள், நாடக மற்றும் நாட்டுப்புறவியல் ஆய்வுசார் செயற்பாடுகள் என அவரின் தமிழியல் ஆய்வுப்புலம் ஈழத்து ஆய்வுப்பரப்பில் கணிசமான பங்களிப்பை வழங்கியுள்ளது என்பதே உண்மை.

**உசாத்துணை நூல்கள்**

வித்தியானந்தன். சு, (1979), தமிழியற் சிந்தனை, முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், யாழ்ப்பாணம்.

வித்தியானந்தன். சு, (1953), இலக்கியத் தென்றல், தமிழ் மன்றம், கல்ஹின்னை – கண்டி.

வித்தியானந்தன். சு, (1971), தமிழர்சால்பு, பாரி புத்தகப்பண்ணை, திரிவல்லிக்கேணி – சென்னை 05.

வித்தியானந்தன். சு, (1977), நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டு நிகழ்ச்சிகள், அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம்.

பிறையன்பன், (1961), கலையும் பண்பும், கிங்ஸ்லி பதிப்பகம், கண்டி.

சண்முகதாஸ். அ, (1984), துணைவேந்தர் வித்தி, தமிழ் மன்றம், கல்ஹின்னை – கண்டி.

வித்தியானந்தன். சு, (1984), வித்தியானந்தம், சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ்.